முருகப்பெருமான் துணை

**மகான் இடைக்காடர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**29.09.2022**, வியாழக்கிழமை

1. மாசற்ற ஞானப் படைகளை
   மண்ணுலகில் நிரப்பி இனிதே
   ஆசாபாச வலைகளை அகற்றி
   அழியாமை தந்து காக்கும் அவதாரம்
2. அவதாரம் புரிந்த அரங்கனே
   அரங்கனுன் அனுகூலம் பெற
   அவனியில் சுபகிருது தரிவை திங்கள்
   அறிவிக்க விய திகதி குருவாரம்
   (சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 12 ம் நாள், 29.09.2022 வியாழக்கிழமை)
3. வாரமதில் அனுகூல ஆசி
   வழங்குவேன் இடைக்காடர் யானும்
   சோரமில்லா ஞான உலகுபடைக்க
   சுத்தநெறியே பிரதானமாக ஏற்று
4. ஏற்று கலிவாழ் மக்கள்
   இணங்கி சரணாகதி கொள்ள
   ஆற்றலாக வழி காட்டும் அரங்கனே
   அய்யமிலா உன்பதம் பற்றிவர
5. பற்றிவரும் மக்கள் வாழ்வில்
   பரிபக்குவம் தயவாகக் கூடி
   உற்ற வினைகளெல்லாம் விலகி
   ஊழ்வினை இல்லா நல் வினை கூடி
6. கூடியே வாழுகின்ற காலமே
   குருமார்க்கம் தேடி நாடி
   இடரில்லாப் பாதுகாப்பு கொண்ட
   இணையிலா ஞானவாழ்வுப்பெற நேரும்
7. நேருமை கொண்ட மக்களாய்
   நீதிகாக்கும் ஞானவான்களாய்
   பெருமைமிக்க சமூகம் படைக்கும்
   பிரணவப் பிரியர்களாகத் தேறி
8. தேறியே உலகை மாற்றுகின்ற
   தேசிகன் வழி ஞானிகளாக
   மாறியே அற்புதம் படைப்பர்
   மாதவசியரின் அவதாரம் பலம்
9. பலம் அறிந்த பண்பாளர்களாக
   பக்குவம் நிறைந்தவர்களாகவும்
   வலம்வந்து தேசம் எங்கிலும்
   வள்ளலின் ஞானப் படைகளாக

10. ஆகவே ஞானயுக மாற்றத்தை
அனைவரும் அனுபவிக்கும் வண்ணம்
செகத்தில் ஞானசித்தர் காலத்தை
சித்திமிக்க காலமாக மாற்றி

11. மாற்றியே ஞானிகள் ஆட்சி
மண்ணுலகை மீட்கும் வண்ணம்
ஆற்றல்பட ஞான ஆட்சித்தருவோம்
அறிவித்த அனுகூல ஆசி முற்றே

–சுபம்–